# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in


**எண். 11/2009**
**நாள் – 16–12–2009**

## செய்திக் குறிப்பு

பொருள் – தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் உத்தேசித்துள்ள நம்பகக் கட்டணம் – பொது மக்கள் கருத்துக்கேட்பு.

தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது நடைமுறையில் இருக்கும் உச்சநேர மின்தடையிலிருந்து விலக்களிப்பு (Peak Hour Powercut exemption) கோரும் உயர் அழுத்த நுகர்வோருக்கு (High Tension consumers) நம்பகக் கட்டணம் (Reliability Charge) விதிப்பதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனுச் செய்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், 2009 டிசம்பர் மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரையிலான காலஅளவின்போது யூனிட் ஒன்றுக்கு ரூ.7/–க்கு மேற்படாத நம்பகக் கட்டணம் உள்ளடங்கலான மின்கட்டணத்தை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளது.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 64ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு மாலையில் உச்சநேர மின்தடையிலிருந்து விலக்களிப்பு கோரும் உயர் அழுத்த நுகர்வோருக்கு நம்பகக் கட்டணம் விதிப்பது குறித்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், டிசம்பர் 30 அன்று முற்பகல் 11.00 மணிக்கு மேல் பிற்பகல் 2.00 மணிக்குள் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்தவுள்ளது. இந்தக் கூட்டம் சென்னை – 6–இல் உள்ள எண்.603, அண்ணாசாலை (ஜெமினி மேம்பாலத்திற்கு அருகில்) ராணி சீதை ஹாலில் நடைபெறவிருக்கிறது. ஆர்வமுடையவர்கள் 2009 டிசம்பர் 30 அன்று முற்பகல் 10.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் கூட்டம் நடைபெறும் இடத்தில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

2. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 64ஆம் பிரிவின்கீழ் ஆணையிடப்பட்டவாறு முன்னணி செய்தி இதழ்களில் தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னுடைய உத்தேசத் திட்டத்தின் சுருக்கக்குறிப்பினை வெளியிடுவதற்கு ஆணையம் பணித்துள்ளது. பொதுமக்கள் தங்களுடைய கருத்துரைகளையும், குறிப்புரைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கும் அனுப்பலாம். இந்த உத்தேசத் திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது (www.tneb.in).

3. இந்த உத்தேசத்திட்டம் 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் ஷரத்துக்களின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆலோசனைக் குழுவினால், 2009 டிசம்பர் 23 அன்று பரிசீலனை செய்யப்படவுள்ளது.

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்